தமிழ்நாடு தகவல் ஆணையம்
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 03.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA1588/F/2020**

**திரு K. விக்னேஷ் ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**கோட்டப்பொறியாளர்,**
**கோட்டப்பொறியாளர் அலுவலகம்,**
**நெடுஞ்சாலைத்துறை, மன்னார்புரம்,**
**திருச்சிராப்பள்ளி - 620 020. ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **09.12.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **10.01.2020** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **11.02.2020** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (03.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு K. விக்னேஷ், திருச்சிராப்பள்ளி மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ கோட்டப்பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலைத்துறை, மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி - 620020 ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 09.12.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கீழ்கண்ட தகவல்களை வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவலர்/ கோட்டப்பொறியாளர் அலுவலகம், நெடுஞ்சாலைத்துறை, மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி -620020 அவர்களுக்கு விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

- M.தேவராஜ், த/பெ P. முத்துக்கருப்பன், சாலைப்பணியாளர் திருச்சிராப்பள்ளி நகர கோட்டம் (மேற்கு), வயலூர் ரோடு, சோமரசம்பேட்டை என்பவர் பணியில் சேர்ந்த தேதி, விவரம், நிரந்தரபணியாளரா என்ற விவரம்
- M.தேவராஜ், த/பெ P. முத்துக்கருப்பன், சாலைப்பணியாளர் என்பவர் பணியில் சேர்ந்தபோது அளித்த கல்வி சான்றிதழ், பிறப்பு சான்றிதழ், இருப்பிட சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் நகல்கள்
- நெடுஞ்சாலைத்துறையில் நிரந்தர சாலைப் பணியாளராகப் பணிபுரியும் M.தேவராஜ் அந்த பணியை தவிர வேறு எந்தவித வணிகம் மற்றும் வருமானத்துடன் கூடிய தொழில், வட்டிக்கு விடும் பைனான்ஸ் தொழில் செய்வதற்கு தங்கள் துறையில் முன் அனுமதி ஏதும் பெற்றுள்ளாரா என்ற விவரமும், முன் அனுமதி பெற்றிருந்தால் அதன் நகல்,
- M.தேவராஜ், த/பெ P. முத்துக்கருப்பன், என்பவர் கடந்த 01.01.2019 முதல் 09.12.2019 வரை மருத்தவ விடுப்பு எடுத்துள்ளாரா என்ற விவரமும், அவ்வாறு மருத்தவ விடுப்பு எடுத்திருந்தால், மருத்துவ விடுப்பு வேண்டி கொடுக்கப்பட்ட விண்ணப்பம் என்ன காரணத்திற்காக மருத்துவ விடுப்பு கோரினார் என்ற விவரமும், மற்றும் அரசு மருத்துவரின் மருத்துவச் சான்றிதழ் ஆகியவற்றின் நகல்களும், மருத்துவ விடுப்பு அங்கீகரிக்கப்பட்ட உத்திரவு நகலும்,
- M.தேவராஜ், த/பெ P. முத்துக்கருப்பன், என்பவர் கடந்த 01.01.2019 முதல் 09.12.2019 வரை எத்தனை நாட்கள் சிறுவிடுப்பு எடுத்துள்ளார் என்ற விவரமும், சிறுவிடுப்பு சம்பந்தமாக உயரதிகாரி அனுமதி அளித்த உத்திரவு நகலும்,
- M.தேவராஜ், த/பெ P. முத்துக்கருப்பன், சாலைப்பணியாளர் என்பவர் அரசியல் கட்சியில் அங்கம் வகிக்க மற்றும் வேறு சங்கத்தில் உறுப்பினராக சேருவதற்கு துறை மூலம் அனுமதி பெற்றுள்ளாரா என்ற விவரமும், அனுமதி பெற்றிருந்தால் அதற்குரிய உத்திரவு நகலும்
- சாலைப்பணியாளர்களின் கடமைகளும், அதிகாரமும் குறித்த அரசு உத்திரவு நகல்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 10.01.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை, மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 11.02.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (03.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காததால் தான் கோரிய தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் 6(1) மனுவில் கோரிய தகவல்களை முழுவதுமாக வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் 09.12.2019 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**
- **மேல்முறையீட்டாளர் 09.12.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

ஒம்/- **(ச.த. தமிழ்குமார்)**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA1588/F/2020</u>
பொதுத் தகவல் அலுவலர்/
கோட்டப்பொறியாளர்
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலைத்துறை, மன்னார்புரம்,
திருச்சிராப்பள்ளி - 620 020.

<u>மனுதாரர்</u>
திரு K.விக்னேஷ்,
த/பெ எம்.கண்ணன்,
நெ.7, 5வது தெரு,
ஆர்.எம்.எஸ். காலனி,
கருமண்டபம் அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி - 620 001.

Copy to: Judgement File/ Spare.
JE/ PA-11.11.2020